# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 336/மா/2025**
**நாள்: 21.01.2026**

ர. சாஜித் பாஷா
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
மண்டலம் –8 --- எதிர்மனுதாரர்
பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை, அமைந்தரை, மஞ்சக் கொல்லை தெரு, கதவு எண் 45/28 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ர. சாஜித் பாஷா என்பவரின் 16.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.07.2025 அன்று பெறப்பட்டு, 336/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, அமைந்தரை, மஞ்சக் கொல்லை தெரு, கதவு எண் 45/28 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ர. சாஜித் பாஷா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 16.07.2025 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, வார்டு 101–ல் அமைந்துள்ளது மஞ்சக் கொல்லை தெருவாகும். இந்த தெருவானது 814 சதுர மீட்டர் தெருவாக உள்ளது. மேலும் இது ''சர்க்கார் புறம்போக்கு'' நிலமாகும். இந்த தெருவில் பழைய எண் 9–ல் மூன்றடுக்கு மாடிகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இந்த கட்டிடத்தில் தெருவை நோக்கி இரண்டு தளங்களில் "BOLCONY"கள் கட்டப்பட்டு வருவதாகவும், இந்த ''ஆக்கிரமிப்பு'' "BOLCONY"களை அகற்ற வேண்டும் எனவும், மண்டலம்–8 அலுவலகத்தில் நேரில் புகார் மனு அளித்திருந்தேன். மேலும் அதன் நகலை அரசு முதன்மைச் செயலாளர், MAWS அவர்களுக்கும் 25.06.2025 அன்று அனுப்பினேன்.

இந்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்க வழக்கம் போல் இந்த அதிகாரிகள் தாமதம் செய்வார்கள் என்று நான் 1913–யில் புகார் அளித்தேன். அது பதிவு செய்யப்பட்டு எண் 2025–415 ஆக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பினார்கள். இந்த புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுத்த வார்டு–101–AE அவர்கள் 12.07.2025 அன்று அளித்துள்ள பதிலில் ''ஆக்கிரமிப்பு'' அகற்றப்பட்டதாக தவறான தகவல் அளித்துள்ளார். மேலும் அவர்

அளித்துள்ள புகைப்படத்தில் தெருவை நோக்கி ''ஆக்கிரமித்து'' கட்டப்பட்டுள்ள இரண்டு தளங்களில் உள்ள "BOLCONY"கள் அகற்றப்படாமல் அப்படியே உள்ளது. நான் மீண்டும் புகார் அளித்த பிறகும் வார்டு AE–3–101 அவர்களும் ''ஆக்கிரமிப்பு'' அகற்றப்பட்டதாக 14.07.2025 அன்று பொய்யான தகவல் அளித்துள்ளார்.

இதுபோன்ற ''சட்டவிரோதமான'' ''ஆக்கிரமிப்பு'' கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்க புகார் மனுக்களை அளித்தால், அதனை கிடப்பில் போட்டு விடுவதும், இதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பின்பு கிடைக்க பெற்ற உத்தரவுகளை நிறைவேற்றாமல் அலட்சியமாக இருப்பதும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்த பின்பு தான் நடவடிக்கை எடுப்பதும் வாடிக்கையாக உள்ளது, இந்த மண்டலம்–8 அலுவலகத்தில்,

சமீபத்தில் மரியாதைக்குரிய பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. J. குமரகுருபரன் அவர்கள் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஆஜராகி மன்னிப்பு கோரியது குறிப்பிடத்தக்கது.

ஆகவே மரியாதைக்குரிய செயலாளர் அவர்கள் புகாரில் குறிப்பிட்டுள்ள பழைய கதவெண் 9, மஞ்சக்கொல்லை தெருவில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் சுமார் மூன்று மாடிகள் கொண்ட கட்டிடத்துக்கு ''கட்டிட திட்ட அனுமதி'' பெறப்பட்டுள்ளதா என்றும், ''ஆக்கிரமிப்பு'' செய்து கட்டப்பட்டுள்ள "BOLCONY"களை அகற்ற தவறிய AE–வார்டு–101 அவர்கள் மீதும், இந்த கட்டிடத்தை கட்டுபவர் மற்றும் உரிமையாளர் மீதும் உரிய விசாரணை நடத்தி ''ஆக்கிரமிப்பு'' செய்து "BOLCONY"களை அகற்றப்படாமல் அகற்றப்பட்டதாக பொய்யான தகவல் அளித்துள்ள வார்டு–101–AE– AEE அவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து இதுபோன்ற ''ஆக்கிரமிப்பு'' கட்டிடங்களை இனிவரும் காலங்களில் கட்டப்படாமல் இருக்க உரிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என இந்த புகார் மனுவின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் AE–வார்டு–101 அவர்கள் அளித்துள்ள புகைப்படத்தில் குறிப்பிட்டு இருக்கும் விலாசமும் தவறானது என்றும், இவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 03.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8 மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. இந்நிலையில், மனுதாரர் தனது 18.11.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''நான் கடந்த 16.07.2025 தேதியிட்ட புகார் மனுவில் கதவெண் 9, மஞ்சக் கொல்லை தெரு, அமைந்தகரையில் உள்ள கட்டப்பட்டு வரும் கட்டிடமானது ''பால்கனி''கள் தெருவை நோக்கி ஆக்கிரமித்து கட்டப்பட்டு உள்ளதாகவும், அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தங்களின் மேலான கவனத்திற்கு புகாராக அனுப்பி வைத்தேன்.

அதனை தாங்கள் ஏற்றுக் கொண்டு இதனை விசாரணைக்கு எடுத்து கொண்டு அதற்கு 336/மா/2025 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பெறப்பட்டுள்ளது என்றும், எனக்கு 09.10.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக தெரியப்படுத்தினீர்கள். தற்போது அந்த கட்டிடத்தின் ''பால்கனி''கள் அகற்றப்பட்டு தெருவை நோக்கி இல்லாமல் அந்த கட்டிடத்தின் எல்லைக்குள் கட்டப்பட்டுள்ளது. மேலும் இதனை செயற்பொறியாளர் மண்டலம்–8 பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் சொன்னதன் அடிப்படையில் நான் நேரில் சென்று (14.11.2025) அன்று பார்த்தேன். அது முறையாக கட்டப்பட்டுள்ளது என்பதை

உறுதி செய்து, இதனை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருவதற்காக இந்த கடிதம் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, மாண்புமிகு முறைமன்ற நடுவ செயலாளராகிய தாங்கள் இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொள்ளாமல் முடித்து வைக்குமாறு தங்களிடம் பணிவுடனும், தாழ்மையுடனும் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவி ஆணையர் தனது 18.12.2025 நாளிட்ட கடிதம் எண் ம.அ.8. ந.க. எண் இ1/5881/2025–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''மண்டலம்–8, பகுதி–23, வார்டு–101ல் பழைய எண் 9, மஞ்சக்கொல்லை தெருவில் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் முதல் மாடியின் பால்கனி சாலைக்கு வெளியே நீட்டப்பட்டு கட்டப்பட்டு வருவதாக தெரிவித்து அவற்றினை மண்டலம் 8ல் எந்த வித நடவடிக்கை எடுக்காத காரணத்தால் 03.10.2025 நாளிட்ட அறிவிப்பில், ஆணையத்திடம் முறையிட்டத்தின் பெயரில் உரிய விளக்கம் அளிக்கும்படி மண்டல அலுவலர் 8 அவர்களுக்கு கடிதம் வரப்பெற்றது.

மேற்கண்ட புகாரின் பெயரில் சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளர் அவர்களுக்கு கடிதம் வாயிலாக தெரிவித்ததன் பெயரில் பால்கனியை சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளர் அவர்கள் அகற்றி விட்டார் என்ற தகவல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரின் மனு, கடிதம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8 உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மண்டலம்–8, பகுதி–23, வார்டு–101ல் பழைய எண் 9, மஞ்சக்கொல்லை தெருவில் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் முதல் மாடியின் பால்கனியில் சாலைக்கு வெளியே ஆக்கிரமிப்பு செய்து நீட்டப்பட்டு கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியதும், தற்போது அந்த கட்டிடத்தின் ''பால்கனி''கள் அகற்றப்பட்டு தெருவை நோக்கி இல்லாமல் அந்த கட்டிடத்தின் எல்லைக்குள் கட்டப்பட்டுள்ளது என்பதை 14.11.2025 அன்று நேரில் சென்று பார்த்ததில், அது முறையாக கட்டப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யப்பட்டதால், 16.07.2025 நாளிட்ட தனது மனுவின் மீது, முறைமன்ற விசாரணைக்கு எடுத்து கொள்ளாமல் முடித்து வைக்குமாறு கோரியிருப்பதும் மனுதாரரின் கடிதத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மண்டலம்–8, பகுதி–23, வார்டு–101ல் பழைய எண் 9, மஞ்சக்கொல்லை தெருவில் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் முதல் மாடியின் பால்கனியில் சாலைக்கு வெளியே நீட்டப்பட்டு கட்டப்பட்டு வருவதாக மனுதாரர் தெரிவித்த புகாரின் பெயரில் சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளர் அவர்களுக்கு கடிதம் வாயிலாக தெரிவித்ததன் பெயரில், அப்பால்கனியை சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளர் அவர்கள் அகற்றி விட்டார் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவி ஆணையரின் கடிதம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மண்டலம்–8, பகுதி–23, வார்டு–101ல் பழைய எண் 9, மஞ்சக்கொல்லை தெருவில் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் முதல் மாடியின் பால்கனி சாலைக்கு வெளியே ஆக்கிரமிப்பு செய்து, நீட்டப்பட்டு கட்டப்பட்ட கட்டிடம், தற்போது தனது புகார் மனுவினை தொடர்ந்து அந்த கட்டிடத்தின் ''பால்கனி''கள் அகற்றப்பட்டு விட்டதால், தனது மனுவினை இம்முறைமன்ற நடுவம் விசாரணைக்கு எடுத்து கொள்ளாமல் முடித்து வைக்குமாறு

கோரியிருப்பதாலும், அதனை பெருநகர சென்னை மாநகராட்சி உதவி ஆணையரும் தன்னுடைய 18.12.2025 நாளிட்ட கடிதத்தில் உறுதி செய்து இருக்கும் நிலையில், மேற்கண்ட கட்டிடம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ன்படி இருப்பதை உறுதி செய்திடுமாறு மண்டலம் 8–ன் உதவி ஆணையரை அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. ர. சாஜித் பாஷா,
கதவு எண் 45/28,
மஞ்சக் கொல்லை தெரு,
அமைந்தகரை,
சென்னை–600 029,

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

3) உதவி ஆணையர், மண்டலம் 8,
பெருநகர சென்னை மாநகராட்சி,
36பி, புல்லா அவின்யூ, ஷெனாய் நகர்,
சென்னை–600 030.

4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

27/1/26
செயலாளர்
27.1.26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032